1995 ஏப்ரல் 4]

205—

அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு இரத்தம் செலுத்துதல்

***36507—**டாக்டர் எம். பி. சேகர் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகர போக்குவரத்துப் பேருந்து விபத்துக்களில் படுகாயமடைந்து அரசு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் படுபவர்களுக்கு உடனடியாக இரத்தம் செலுத்தப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. நா. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

நகரப் போக்குவரத்து பேருந்து விபத்துக்களில் படுகாயமுற்று அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படும் நோயாளிகளுக்கு, அப்பிரிவு மருத்துவ அதிகாரியின் கேட்பிற்கிணங்க இரத்த வங்கியிலிருந்து உடனுக்குடன் சம்பந்தப்பட்ட பிரிவு இரத்தம் பெறப்பட்டு, நோயாளிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சாலை விபத்துகள் மூலம் குருதி இழந்து குற்றுயிராகக் கிடக்கும் படுகாயமுற்றவர்களுக்கு குருதி மூலம் உயிரைக் காக்க முடியும் என்ற நிலையில் உரிய நேரத்தில் உரிய குருதியைக் கொடுத்து அரசு மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படுகிறது என்று 'ஆம்' என்று கூறிய மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, குருதி சேமிப்பு நிலையங்கள் எல்லா மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் அமைக்கப்படுமா ? குருதி செலுத்துவதன் மூலம் பரவும் எய்ட்ஸ், ஜான்டிஸ் போன்ற நோய்களைத் தடுக்க தற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நா. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலே நமக்கு இப்போது ரத்த சேமிப்பு வங்கிகள் இருக்கின்றன. ஏறக்குறைய அரசு சார்பாக 88 இடங்களிலே தமிழகம் முழுவதும் இந்த வங்கி அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த எய்ட்ஸ் பொறுத்தவரை அதிலேயிருந்து பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. பரிசோதிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் இப்போது

கொடுக்கப்பட்டிருக்கின்றன. எய்ட்ஸ் செல் மூலமாக இந்த வங்கிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எச்.ஐ.வி.. எய்ட்ஸ் மற்றும் அப்படைசிஸ்-பி ஆகிய பரிசோதனைகளை செய்வதற்குத் தேவையான வசதிகள் இப்போது செய்யப்பட்டு வருகிறது. எனவே பயப்படுகிற அளவிற்கு ஒன்றும் நேர்ந்துவிடாது. எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஆண்டு ரூபாய் 45 லட்சம் ஒதுக்கி உளுந்தூர்பேட்டை. ஹோசூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய மாவட்ட மருத்துவ மனைகளில் அவசர விபத்து சிகிச்சைப் பிரிவு செயல்படுத்தியுள்ளது. இந்த மருத்துவ மனைகளில் இந்தப்பிரிவுகளை அளித்ததற்கு பொற்கால அரசு நடத்தும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இந்த அவசரப் பிரிவில் ஒரு சர்ஜன். ஒரு பிசிசியன். ஒரு ஆர்த்தோ சர்ஜன். ஒரு அனாஸ்த்தடிஸ் ஆக ஒரு டீம் ஆக நியமித்து பறக்கும் மருத்துவ படை. பிளையிங் மெடிகல் ஸ்குவாட் அமைத்து மருத்துவ ஊர்தியும் அளித்து விபத்து நடந்த இடத்திலேயே சென்று முதலுதவி போன்ற சிகிச்சைகள் அளித்து நோயாளிகளை ஸ்டெபிலைஸ் செய்து பக்கத்து பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்ப வசதிகள் செய்து கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தேவையான மருத்துவர்கள் அங்கே நியமிக்கப்படுவார்கள். அதேபோல. ஆம்புலன்ஸ் வண்டியைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட 50 படுக்கைகளுக்கு மேலே இருக்கின்ற மருத்துவ மனைகளுக்கு கொடுக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு வரிசையாக இப்பொழுது கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். எனவே அந்த ஏற்பாடும் தொடர்ச்சியாக செயயப்படும். அதோடு. விபத்துக்கு உள்ளானவர். அவருக்கு என்ன அடிபட்டிருக்கிறது. அவரை அந்த மருத்துமனையிலே சேர்த்தால் போதுமா அல்லது பெரிய மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டுமா என்பதை அந்த சம்பந்தப்பட்ட ஸ்பெஷலிஸ்ட் பார்த்து. அந்த தேவையான நடவடிக்கையை அவர்கள் மேற்கொள்வார்கள். எனவே. அதிலே விபத்து நடந்த இடத்திற்கு தகவல் கிடைத்து போவதை விட விபத்து நடந்த இடத்திலே இருந்து நோயாளிகளைக் கொண்டு வந்து சேர்ப்பது தான் மிகச் சுலபமாக இருக்கிறது. எனவே. அதற்கான நடவடிக்கை இப்பொழுது எடுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது விபத்துப்

1995 ஏப்ரல் 4]

பிரிவில் முழுமையாக அவர்களுக்கு பயன்படுகிற வகையிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும். விபத்துப் பிரிவிலே பணியாற்றுகிற மருத்துவர்கள் ஒரு தனிப் பயிற்சிப் பெற்றவர்களாக. அதாவது எந்தக் கோணத்திலேயும் அவர்கள் சிகிச்சைக் கொடுப்பதற்கு. முதலுதவியை செய்வதற்கு தகுதிப் பெற்றவர்களாக உருவாக்க வேண்டுமென்று சொல்லி அவர்களுக்கு என்று தனிப் பயிற்சியைக் கொடுக்கலாம் என்று இப்பொழுது சம்பத்திலே அரசு ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. எனவே. அதன்படி செய்தால் இன்னும் கொஞ்சம் சிறப்பாக நாம் செயல்படுவதற்கு வாய்ப்பு இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மருத்துவ சிகிச்சை இன்னும் சிறப்பாக செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதே முறையிலே இந்த எயிட்ஸ் நோயைக் குணப்படுத்துவதற்கு ஆர். எஸ். பார்மசூட்டிக்கல்ஸ் என்பவர்—தர்மபுரி மாவட்டத்திலிருந்து என்னிடம் ஒருவர் ஒரு கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விபத்துக்களில் காயமுற்றவர்களுக்கு இரத்த வங்கியிலிருந்து இரத்தம் பெற்று சிகிச்சை அளிப்பது பற்றிய கேள்வி. இதிலே. இரத்தம் செலுத்துவதில் எயிட்ஸ் வந்து விடுகிறதே என்று நீங்கள் எயிட்ஸ் பற்றிய தனி விளக்கம் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இதைப் பற்றி துணைக் கேள்வி கேளுங்கள்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : ஆகையினால். இந்த மாதிரி ஒரு 10 வியாதியஸ்தர்களை ஒரு எக்ஸ்பெரிமெண்டல் பர்பஸ்-க்கு கொடுக்க முடியுமா என்று அந்த டாக்டர் கேட்கிறார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அந்த மகஜரை அனுப்பியிருக்கிறார். அதை மறுபரிசீலனை செய்து. அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசினுடைய சார்பாக அலோபதி மற்றும் சித்தா இரண்டையும் இணைத்து ஒரு ஆய்விற்காக இரண்டு இடங்களிலே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இப்பொழுது ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. எனவே. இப்படி யாராவது தனியார் கேட்டால் அவர்களுக்கு உதவி செய்வதிலே நிச்சயமாக எந்தத் தவறும் இருக்க முடியாது. காரணம். எயிட்ஸ்-க்கு இன்னும் உலகம் முழுவதும் மருந்து

கண்டுபிடிக்கிற அளவிற்கு ஒரு முயற்சி எடுத்துக் கொண்டு இருந்தாலும் கூட வெற்றி பெறவில்லை. எனவே. நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற இந்திய மருத்துவத்தை செய்துகொண்டு இருக்கக் கூடியவர்கள் அதற்கு மருந்தை கண்டுபிடித்தால். அந்த இந்திய மருத்துவத்திற்கு ஒரு பெரிய மகத்துவம் கிடைக்கும். எனவே. நிச்சயமாக அரசாங்கம் அதை ஊக்குவிக்க தயாராக இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் நம்முடைய மருத்துவர்களோடு. அதற்காக ஒரு குழுவை வேண்டுமானால் நாம் அமைக்கலாம். அந்தக் குழுவிலே வந்து அவர்கள் தெரிவித்தால். அவர்களுடைய விளக்கங்கள் எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து அதற்கு ஏதாவது வெற்றிகரமாக வரும் என்ற ஒரு நம்பிக்கை இருந்தால் அதற்கான ஏற்பாட்டை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஆக்சிடெண்டில் படுகாயமடைந்த நோயாளிகளுக்கு ரத்தம் செலுத்துவதில் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு 90 சதவிகிதம் நோயாளிகள். விபத்துக்கு உள்ளானவர்கள் காப்பாற்றப் படுகிறார்கள். ஆனால் ஒரு 10 சதவிகித நோயாளிகளைக் காப்பாற்றப்பட முடியாமல் இறந்து போகின்றார்கள். காரணம். அந்த நேரத்திலே இருக்கின்ற டியூட்டி டாக்டர்கள் பெரும்பகுதி நல்லவர்களாகவும், சிறப்பானவர்களாகவும் இருக்கிறார்கள். ஒருசில பேர் தாமதம் செலுத்தி, அந்த இரத்தம் கொடுப்பதிலே தாமதம் செலுத்துவதனால் அந்த விபத்துக்கு உள்ளான நோயாளி இறந்துவிடுகிறார். அதேபோல் கார்டியாலஜி பிரிவிலே மிக சீரியஸ் ஆக. அட்டாக் ஆகி கொண்டு போய் சேர்ப்பவர்களை கூட உடனடியாக ட்ரீட்மெண்ட் கொடுத்து அந்த நோயாளிகளுக்கு எத்தனை அட்டாக் வந்தாலும்கூட காப்பாற்றுகிறார்கள். நான் அந்த ட்ரீட்மெண்டில் இருந்தேன். அதனால். ஒரு ஏழை கூட இங்கே சாகவில்லை. அந்த அளவிற்கு சீரியஸ் ஆக. சின்சியர் ஆக ஒரு பைசா கூட வாங்காமல் பிரயாதமாகச் செயல்படுகிறார்கள். அந்த கார்டியாலஜி பிரிவிலே. அறுவை சிகிச்சைப் பிரிவு ஆனாலும் சரி அல்லது மருத்துவப் பிரிவு ஆனாலும் சரி இரண்டு பிரிவிலேயும். அதேபோல இந்தப் பிரிவிலே இருக்கின்ற அந்த 10 பெர்சண்ட் குறையையும் நீக்கி. நூற்றுக்கு நூறு முழுமையான அளவிற்கு அந்த நோயாளிகள் காப்பாற்றப்படுகின்ற அளவிற்கு புரட்சித் தலைவியின் ஆட்சியில் ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு நபர் விபத்துக்குள்ளாகும்போது. அவர் எவ்வளவு

நேரத்திலே மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படுகிறார்; அவர் அடிபட்ட விதம் அல்லது அடிபட்ட இடம் இதைப் பொறுத்தும் — அடிபட்ட இடம் என்று சொன்னால் அவர் உடலிலே பாதிக்கப்பட்ட இடம் — இவற்றைப் பொறுத்துத்தான் வெற்றியும் தோல்வியும் இருக்கிறது. சில நேரங்களிலே ஹெட் இன்ஜுரி ஏற்பட்டுவிட்டால் மிகத் திறமையான டாக்டர்கள் எவ்வளவு முயற்சி எடுத்தாலும்கூட காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. சில நேரங்களிலே மிக தூரத்திலே இருந்து மருத்துவ மனைக்கு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டால், வருவதற்குள்ளாகவே அதிகமான ரத்தம் வீணாகி, காப்பாற்ற முடியாமல் போகிறது. இருந்தாலும், அரசு மருத்துவர்கள் காரணமாகவோ அல்லது அவர்களுடைய பணியின் காரணமாகவோ ஏதாவது இந்த மாதிரி ஏற்பட்டால், நிச்சயமாக அவர்கள் அறிவுறுத்தப்பட்டு, சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதிலே 10 சதவிகிதத்தையும் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 206. திருமதி ஆர். சாவித்திரி அம்மாள். மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

206—

மணம்பூண்டியில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்

***37141**—*திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் :*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, மணம்பூண்டி கிராமத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக கிளை பணிமனை திருக்கோவிலூரில் நிறுவுதற்காக திருக்கோவிலூர் வட்டம், மணம்பூண்டி கிராமம் புல எண்.80/6-ல் 1.58.5 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி நிலத்தினை நிலக்கையக சட்டப்பிரிவின் கீழ் கையகப்படுத்த நடவடிக்கைகள் வருவாய் துறையினரின் பரிசீலனையில் உள்ளது. நில